

சென்னை ஏ.ஜி. டி.எம்.எஸ். - வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரெயில் சுரங்கப் பாதையில் டீசல் என்ஜின் மூலம் சோதனை ஓட்டம் நேற்று நடந்தபோது எடுத்தபடம்.

### டி.எம்.எஸ். - வண்ணாரப்பேட்டை இடையே

# மெட்ரோ ரெயில் சுரங்கப்பாதையில் என்ஜின் சோதனை ஓட்டம்

சென்னை, ஆக.25-

சென்னை தேனாம்பேட்டை டி.எம்.எஸ். - வண்ணாரப்பேட்டை இடையேயான மெட்ரோ ரெயில் சுரங்கப்பாதையில் என்ஜின் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்தது.

## மெட்ரோ ரெயில்

சென்னையில் 2 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் திட்ட பணிகள் நடந்துவருகிறது. இதில் முதலாவதாக கோயம்பேடு-ஆலந்தூர் இடையே 2015-ம் ஆண்டு ஜூன் மாதம் போக்குவரத்து தொடங்கியது. தொடர்ந்து பணிகள் நிறைவுபெற்ற ஒவ்வொரு இடங்களாக போக்குவரத்து தொடங்கிவருகிறது.

சென்னையின் இதயப்பகுதியான அண்ணா சாலையில் பணிகளை மேற்கொள்ள கேமன் இந்தியா மற்றும் ரஷியாவை சேர்ந்த மாஸ் மெட்ரோ ஆகிய நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டு இருந்தது. அண்ணா சாலையில் சுரங்கம் தோண்டும்போது பாறைகள் அதிகம் காணப்பட்டதால் ஒப்பந்தக்காரர்களால் பணியை தொடர்ந்து செயல்படுத்த முடியாமல்போனது. இதனால் திட்டமிட்ட காலத்தில் பணிகளை முடிக்க முடியாமல் ரஷியாவை சேர்ந்த மாஸ் மெட்ரோ நிறுவனம் திரும்பிச் சென்றுவிட்டது.

## சோதனை ஓட்டம்

இதனால் சில ஆண்டுகள் அண்ணா சாலையில் பணிகள் நடக்காமல் கிடப்பில் இருந்தது. இதற்கிடையில் மாற்று ஒப்பந்தக்காரர்கள் மூலம் பணியை மெட்ரோ ரெயில் நிறுவனம் தொடர்ந்து நிறைவேற்றி தற்போது பணிகளை நிறைவு செய்துள்ளது. திட்டம் தொடங்கப்பட்டு ஆண்டுகள் பல உருண்டோடிய நிலையில் தற்போது தான் அனைத்து பணிகளும் நிறைவடைந்து உள்ளன.

அண்ணா சாலையில் உள்ள ஏ.ஜி-டி.எம்.எஸ். - வண்ணாரப்பேட்டை இடையே டீசல் என்ஜின் மூலம் மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் மற்றும் பொறியாளர்கள் நேற்று சோதனை ஓட்டம் நடத்தினர்.

## கூவம் ஆறுக்கு கீழே...

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:-

ஏ.ஜி-டி.எம்.எஸ். - வண்ணாரப்பேட்டை இடையே நேற்று டீசல் என்ஜின் மூலம் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. நேற்று காலை 10.20 மணிக்கு டி.எம்.எஸ். ரெயில் நிலையத்தில் இருந்து புறப்பட்ட டீசல் என்ஜின் ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி., அரசினர் தோட்டம் வழியாக சென்டிரல் வந்தது.

கூவம் ஆறுக்கு கீழே சுமார் 100 அடி ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதை வழியாக சென்டிரல் ரெயில் நிலையத்தில் உள்ள கீழ்மட்ட (லோயர் லெவல்) ரெயில் நிலையத்துக்கு காலை 11.30 மணி அளவில் என்ஜின் வந்தது. தொடர்ந்து மண்ணடி வழியாக வண்ணாரப்பேட்டை ரெயில் நிலையத்துக்கு பகல் 12 மணி அளவில் சென்று சேர்ந்தது.

9.5 கிலோ மீட்டர் தூரம் கொண்ட இந்தப்பாதையில் மீண்டும் வண்ணாரப்பேட்டையில் இருந்து புறப்பட்டு ஏ.ஜி-டி.எம்.எஸ். ரெயில் நிலையத்துக்கு பகல் 2 மணி அளவில் வந்தது.

## டிசம்பரில் போக்குவரத்து

இந்த சோதனை ஓட்டத்தின்போது சுரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்னணு கருவிகள், தண்டவாளத்துக்கும் பிளாட்பாரத்திற்கும் இடையே அமைக்கப்பட்டுள்ள இரும்பு கதவுகள், சிக்னல்கள் ஆகியவையும் ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து ஒருசில வாரங்களில் இந்த பாதையில் மெட்ரோ ரெயிலையும் இயக்கி சோதனை செய்ய உள்ளோம்.

செப்டம்பரில் பாதுகாப்பு ஆணையர் ஆய்வு செய்தபின், பயணிகள் ரெயிலை இயக்க சான்றிதழ் பெறுவதற்கு திட்டமிட்டுள்ளோம். இதனைத் தொடர்ந்து டிசம்பர் மாதம் முதல் ஏ.ஜி-டி.எம்.எஸ். - வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரெயில் போக்குவரத்தை தொடங்க இருக்கிறோம்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.